**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. M.அபிநயா, B.A.B.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம், (FAC)**

**2026 ஆம் ஆண்டு மே மாதம் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி திங்கள் 16-ம் நாள்**

**CC. No.681 of 2025**

**(CNR No.TNVP10-3084-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C. No.681/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திண்டிவனம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 300/2025,<br>பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2),<br>118(1), 351(3) BNS |
| 3 | எதிரிகளின் விவரம் | | 1. அப்பு (எ) ஆகாஷ், வயது 23,<br>த/பெ விஜயகுமார்,<br>நெ.28, அமரர் அண்ணா வீதி,<br>கிடங்கல் - 2,<br>திண்டிவனம் |
| | | | 2. ராஜேஷ், வயது 26,<br>த/பெ கண்ணன்,<br>ராஜன் வீதி, கிடங்கல் - 2,<br>திண்டிவனம் |
| | | | 3. பிரதீப்குமார் (எ) சேட்டு, வயது 28,<br>த/பெ கண்ணன்,<br>ராஜன் வீதி, கிடங்கல் - 2,<br>திண்டிவனம் |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:13:37 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | 4.அருண்பிரகாஷ் (எ) மூங்கிலான்<br>வயது 20,<br>த/பெ மூங்கிலான்,<br>எம்.ஜி.ஆர். நகர், கிடங்கல் - 2<br>திண்டிவனம் |
| 4 | சம்பவ தேதி | : | 10.09.2025 |
| 5 | முறையீடு | : | 10.09.2025 |
| 6 | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | A1 11.09.2025 to 29.12.2025, A2 to A4 11.09.2025 to 18.11.2025 |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 06.12.2025 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 29.12.2025 |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | |

| Witness | Date of Chief | Date of Cross |
|---|---|---|
| PW-1 | 05.01.2026 | 05.01.2026 |
| PW-2 | 05.01.2026 | 05.01.2026 |
| PW-3 | 28.01.2026 | 28.01.2026, 07.05.2026 |
| PW-4 | 28.01.2026 | 28.01.2026 |
| PW-5 | 28.01.2026 | 28.01.2026 |
| PW-6 | 28.01.2026 | 11.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| 11 | பிரிவு 351(1)(பி) BNSs ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 22.05.2026 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:13:48 +0530

| | | | |
|---|---|---|---|
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரிகள் பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1)- BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 29.12.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 25.05.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ரூபாகரன்,M.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:14:00 +0530

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

கடந்த 10.09.2025 ம் தேதி மாலை 18.00 மணியளவில் திண்டிவனம் வட்ட காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பேரில் சென்னை பேருந்து நிறுத்தம் அருகே திண்டிவனம் காவல் நிலைய தலைமைகாவலர்கள் முருகையா மற்றும் நாகராஜ் ரோந்து பணியில் இருந்தபோது திண்டிவனம் காவல் நிலையத்திற்கு வரப்பட்ட அவசர 100 அவரச கால் அழைப்பின்பேரில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் சென்னை பேருந்து நிலையம் அருகே குடிபோதையில் சிலர் தகராறு செய்து கொண்டிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று திண்டிவனம் காவல் நிலையத்தில் இருந்து அந்த பகுதியில் ரோந்து பணியில் இருந்த 1 மற்றும்2 வது சாட்சிகளுக்கு தகவல் தெரிவித்ததை பெற்று பிரச்சினைக்குள்ள இடத்திற்கு சாட்சிகள் இருவரும் சென்றபோது அந்த இடத்தில் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுமக்களை பார்த்து தேவிடியா பசங்களா நாங்க யாருனு தெரியுமா நாங்கதாண்டாஇங்க ரவுடி என்று பொதுமக்களை அச்சுறுத்திக்கொண்டும் அவ்வழியாக சென்ற பேருந்தினை மறித்து போக்குவரத்துக்கு இடையூறு செய்து கொண்டிருந்தவரிடம் சாட்சிகள் இருவரும் அவர்களை பார்த்து ஏன் தேவையில்லாமல் பிரச்சினை செய்து கொண்டிருக்கிறீர்கள் கலைந்து போங்கள் என்று கூறியபோது எதிரிகள் அனைவரும் சேர்ந்து நீங்க என்ன போலிசார் பெரிய பூலா என்று மரியாதையா இங்கிருந்து ஓடிபோங்கடா தேவிடியா பசங்களா இல்லைனா உங்க கழுத்தை அறுத்து போட்டுடுவேன் என்று மிரட்டியுள்ளார்.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:14:08 +0530

மேலும் சாட்சிகள் அவர்களை பார்த்து நீங்கள் போதையில் இருக்கீங்க எதுவா இருந்தாலும் காலையில் பேசிக்கலாம் என்று சொல்லி அவர்களை போக சொல்லி எச்சரித்தபோது 1வது எதிரி ஆகாஷ் என்பவர் முழுசீருடையில் இருந்த 1வது சாட்சியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கீழே கிடந்த கல்லை எடுத்து 1வது சாட்சியின் வலது மணிகட்டில் ஓங்கி அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி எதிரிகள்பிரதீப்குமார் மற்றும்சின்னராஜ் ஆகிய இருவரும் சேர்ந்து சரமாரியாக தாக்கி குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS ன்படி திண்டிவனம் காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS -ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4)வழக்கின்ஆவணங்களைபரிசீலனைசெய்ததில்எதிரிகள்மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2),118(1), 351(3) BNS –ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:14:16 +0530

என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

6). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2),118(1), 351(3) BNS – ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

8) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

<u>9) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் :</u>

**அ.சா.1 திரு.முருகையா தலைமை காவலர்** தனது சாட்சியத்தில் கடந்த 10.09.2025

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:14:24 +0530

அன்று மாலை சுமார் 18 மணியளவில் முழு சீருடையில் ரோந்து அலுவலராக பணியிலிருந்தபோது காவல் நிலையத்திலிருந்து வரப்பட்ட 100 அவசர கால அழைப்பின்பேரில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழே சென்னை பேருந்து நிறுத்தம் அருகே குடிபோதையில் சிலர் தகராறு செய்வதாக கிடைத்து தானும், தன்னுடன் தலைமை காவலர் நாகராஜ் என்பவரும் திண்டிவனம் மேம்பாலம் கீழே சென்று பார்க்கும்போது சரித்திர பதிவேடு குற்றவாளிகள் அப்பு (எ) ஆகாஷ் , ராஜேஷ், பிரதீப்குமார் (எ) சேட்டு அருள்பிரகாஷ் (எ) சின்னராசு ஆகிய நான்கு பேரும் அங்கிருந்த பொதுமக்களை பார்த்து அசிங்கமாக பேசி நாங்கள் தான் இங்க ரவுடி என்று அங்கு வரும் பேருந்துகளை வழிமறித்து போக்குவரத்து இடையூறு செய்திருந்தவர்களை இவ்வாறு செய்யக்கூடாது செல்லுமாறு சொன்னபோது தங்களை பார்த்து போலீஸ்னா என்ன பெரிய பூலா என்றும் இங்கிருந்து செல்லவில்லை என்றால் உங்கள் கழுத்தை அறுத்துவிடுவதாகவும், தேவிடியா பசங்களா இங்கிருந்து கிளம்புங்கடா என்று அசிங்கமாக பேசினார்கள் என்றும், தாங்கள் எதுவாயிருந்தாலும் காலையில் பேசிக்கலாம் என்று சொன்னதற்கு அப்பு (எ) ஆகாஷ் என்பவர் தனது சட்டையை பிடித்து கீழே தள்ளினார் எனவும், ராஜேஷ் என்பவர் கீழே கிடந்த கல்லை எடுத்து தனது வலது கை மணிக்கட்டில் அடித்தார், சேட்டு, சின்னராசு ஆகியோர்கள் கையாலும், காலாலும் உதைத்தார்கள் தன்னுடன் இருந்த காவலர் நாகராஜ் என்பவர் தன்னை மீட்டு அங்கிருந்த பொதுமக்கள் உதவியோடு அவர்களை பிடிக்க முயற்சித்தபோது 4 பேரும் தப்பியோட முயன்றார்கள் எனவும், இதில் ராஜேஷ் என்பவரை மடக்கி பிடித்து காவல் நிலையம்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:14:32 +0530

அழைத்து வந்து ஒப்படைத்தார் எனவும், பின்னர் உதவி ஆய்வாளரிடம் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்தார் எனவும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், வழக்கு சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

10. **அ.சா.2 திரு.நாகராஜன்** தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 10.09.2025 அன்று மாலை 6 மணிக்கு அவரச எண். 100 மூலமாக தங்கள் காவல் நிலையத்தில் பெற்ற தகவலின்பேரில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் சென்னை பேருந்து நிறுத்தத்தில் யாரோ சிலர் குடித்துவிட்டு தகராறு செய்வதாக கிடைத்த தகவலின்பேரில் தானும், தலைமை காவலர் 1863 முருகையா அவர்களும் சம்பவ இடம் சென்று பார்த்தபோது அப்பு (எ) ஆகாஷ், ராஜேஷ் சேட்டு (எ) பிரதீப்குமார், அருண்பிரகாஷ் (எ) சின்னராசு ஆகியோர்கள் குடித்துவிட்டு மதுபோதையில் இங்க நாங்கதான் பெரிய ரவுடி தங்களிடம் யாரும் வரக்கூடாது என்று பொதுமக்களுக்கு இடையூறாக இருந்ததாகவும், இதனை தானும், அ.சா.1 ம் கேட்டபோது போலீஸ்னா பெரிய பூலா என்று கேட்டு தேவிடியா பசங்களா இங்கிருந்து ஓடிவிடுங்கள் இல்லையென்றால் கழுத்தை அறுத்துபோட்டுவிடுவோம் என்று பேசினார்கள் எனவும், தாங்கள் எதிரிகள் போதையில் இருந்ததால் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னதாகவும், அதற்கு அப்பு (எ) ஆகாஷ் அ.சா.1 ன் சட்டையை பிடித்து இழுத்து தள்ளியதாகவும், கீழே விழுந்த அ.சா.1-யை ராஜேஷ் என்பவர் வலது கையின்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:14:40 +0530

மணிக்கட்டில் அடித்தார் எனவும், பிரதீப்குமாரும், சின்னராசும் அ.சா.1-யை கையாலும், காலாலும் அடித்தார்கள் எனவும், இதில் தான் அ.சா.1-ஐ மீட்டு பொதுமக்கள் உதவியுடன் எதிரிகளை பிடிக்க முற்பட்டபோது அவர்கள் தப்பித்து ஓடிவிட்டார்கள் எனவும், இதில் எதிரி ராஜேஷ் என்பவரை மட்டும் பிடித்து காவல் நிலையம் அழைத்து வந்து முருகையா புகார் கொடுத்தார் எனவும், இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார்கள் எனவும் கூறியுள்ளார்.

11.**அ.சா.3 திரு.பிரகாகரன்** தனது சாட்சியத்தில் அ.சா.1, அ.சா.2 மற்றும் சாட்சி செல்வம் ஆகியோர்களை தனக்கு தெரியாது எனவும், ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியை மட்டும் தனக்கு தெரியும் எனவும், கடந்த 10.09.2025 அன்று மாலை 6.00 மணியளவில் தான் திண்டிவனம் மேம்பாலம் கீழ் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்தார் எனவும், அப்போது 4 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் எனவும், அந்த 4 நபர்களில் 1வது எதிரி இருந்தார் எனவும், அந்த 4 நபர்களும் தேவிடியா பையா என்று அந்த வழியாக சென்ற பொதுமக்களை அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள் எனவும், அப்போது லோக்கல் காவல் நிலையத்திலிருந்து 2 போலீசார்கள் வந்து போகச்சொல்லி சொன்னார்கள் எனவும், அதற்கு 4 நபர்களும் போலீசாரை பார்த்து போலீஸ்னா பெரிய பூலா போங்கடா என்று கேட்டார்கள் எனவும், ரோந்து வந்த போலீசாரை கையில் அடித்துவிட்டு இரண்டு போலீசாரையும் தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:14:48 +0530

12. பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட **அ.சா.4 திரு.சாந்தகுமார்** தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், கடந்த 10.09.2025 அன்று இரவு சண்டை நடந்ததாகவும் மறுநாள் காலை 7 மணியளவில் டவுன் காவல் நிலையத்திலிருந்து போலீசார் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழுள்ள ஆட்டோ ஸ்டேண்டில் வந்து சண்டை நடந்த விவரத்தை விசாரித்து படம் வரைந்து தன்னிடம் அ.சா.ஆ.2 ல் கையொப்பம் வாங்கினார்கள் எனவும், தன்னுடன் சிவா என்பவரும் கையொப்பம் செய்தார் எனவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. மற்றொரு பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட **அ.சா.5 திரு.சிவா** தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.3 தன்னுடையதுதான் என்றும், கடந்த 11.09.2025 அன்று காலை 7 மணியளவில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் ரவுண்டானா அகமது டீ ஸ்டால் எதிரில் தாங்கள் இருந்தபோது டவுன் காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்து 10.09.2025 அன்று நடந்த சண்டை நடந்த விவரத்தை விசாரித்து படம் வரைந்து தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் எனவும், தன்னுடன் சாந்தகுமார் என்பவரும் கையொப்பம் செய்தார் எனவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:14:56 +0530

14. புலன் விசாரணை அதிகாரி **அ.சா.6 திரு.முருகானந்தம் காவல் உதவி ஆய்வாளர்** தனது சாட்சியத்தில் கடந்த 10.09.2025 ம் தேதி 20 மணிக்கு திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது தலைமை காவலர் அ.சா.1 முருகையா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.300/2025 பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்தார் எனவும், பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் 11.09.2025 காலை 7 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் சிவா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்தார் எனவும், பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான முருகையா, நாகராஜன், பிரபாகரன், செல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் எனவும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வர எதிரிகளை தேட எதிரிகள் ராஜேஷ், அருண் (எ) சின்னராசு, பிரதீப்குமார் (எ) சேட்டு ஆகியோர்கள் அன்றைய தினம் 12.30 மணிக்கு திண்டிவனம் காவல் நிலையத்தில் ஆஜரானவர்ளை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு பாராவசம் ஒப்படைத்தார் எனவும், வழக்கின் மற்றொரு எதிரியான அப்பு (எ) ஆகாஷ் தலைமறைவு ஆகிவிட்டார் எனவும், பின்னர் வழக்கில் காயம்பட்ட முருகையா என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த உதவி மருத்துவர் துளசி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று விபத்து பதிவேட்டுடன் கூடிய

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:15:03 +0530

காயச்சான்று அ.சா.ஆ.7 என்றும், பின்னர் தலைமறைவு எதிரியை தேடிச்சென்றதில் அவரை பற்றி எந்த புலனும் கிடைக்காததால் 1வது எதிரி தலைமறைவாகியிருந்த நிலையில் வழக்கின் விசாரணையை முடித்து 1வது எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS ன்படியும், 2,3 எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 351(3) BNS ன்படியும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து 27.11.2025 அன்று தாக்கல் செய்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

15. கடந்த 10.09.2025 அன்று மாலை அ.சா.1 தலைமை காவலர் திரு.முருகையன் பணியில் இருந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திக்கொண்டிருப்பதாக அவரச கால அழைப்ப எண்.100 ன் வழியாக திண்டிவனம் காவல் நிலையத்திற்கு தகவல் வந்ததையடுத்து அ.சா.1 திரு.முருகையன், அ.சா.2. திரு.நாகராஜன் தலைமை காவலர் ஆகியோருடன் சம்பவ இடத்திற்கு சென்று எதிரிகளை விசாரித்தபோது 1வது எதிரியான அப்பு (எ) ஆகாஷ் என்பவர் அ.சா.1 முருகையன் என்பவரின் சீருடையை பிடித்து கீழே தள்ளியதாகவும், கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 முருகையன் என்பவரின் வலது கை மணிக்கட்டில் ஓங்கி அடித்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், 3வது எதிரி பிரதீப்குமார் மற்றும் 4 வது எதிரி அருண்பிரகாஷ் ஆகியோர் அ.சா.1 -யை சரமாரியாக தாக்கியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் கூறியுள்ள சங்கதிகளை ஒத்துரைத்து காயம்பட்ட சாட்சியான அ.சா.1 முருகையா மற்றும் கண்ணுற்ற

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:15:25 +0530

சாட்சியான அ.சா.2 நாகராஜன் ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர்.

16. ஆனால் சம்பவ இடத்தில் பழ வியாபாரம் செய்ததாக கூறப்படும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 திரு.பிரபாகரன் அளித்துள்ள சாட்சியத்தில் சம்பவ இடத்திற்கு 2 போலீசார் வந்தததாகவும், ரோந்து வந்த போலீசாரை பார்த்து அசிங்கமாக திட்டி சட்டையை பிடித்து இழுத்து கீழே கிடந்த கல்லை எடுத்து நாகு என்ற போலீசாரை கையில் அடித்துவிட்டு இரண்டு போலீசாரையும் தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள் என்று கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்திற்கு முரண்பட சாட்சியம் அளித்துள்ளார்.

17. மேலும் சம்பவ இடத்தில் நாகு என்ற போலீசாரை எதிரிகள் கல்லை எடுத்து அடித்துவிட்டதாக அ.சா.3 அவரது சாட்சியத்தில் கூறியுள்ளார். இந்நிலையில் அ.சா.1-யை 2 வது எதிரியானர் கல்லை எடுத்து தாக்கியதாக அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தில் முரண்பட கூறியுள்ளது, இவ்வழக்கு குறித்து மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

18. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அளித்துள்ள சாட்சியத்தில் 1 வது எதிரியானவர் அ.சா.1 ன் சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளியதாகவும், 2 வது எதிரியானவர் அ.சா.1 -யை கல்லால் அடித்ததாகவும், 3,4 எதிரிகள் அ.சா.1-யை கையாலும், காலாலும் எட்டி உதைத்தாகவும் சாட்சியம் அளித்துள்ளனார். ஆனால்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:15:35 +0530

புகாரில் அ.சா.1 -ன் சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி கல்லால் அடித்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சம்பவ இடத்தில் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்ததாக கூறப்படும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 அளித்துள்ள சாட்சியத்தில் எதிரிகள் அனைவரும் அசிங்கமாக திட்டி கல்லால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

19. மேலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 திரு.பிரபாகரன் என்பவரை 4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது " 1வது எதிரி பேருந்தில் பழம் விற்பனை செய்து வருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரி சம்பவ இடத்தில் பார்த்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் 4 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டதாக சொல்லியுள்ளேன், அவர்கள் யார் என்று தெரியாது என்றால் சரிதான். போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த பிறகு இரவு 1 மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள், முதல் விசாரணையில் நாகு என்ற போலீசாரை அடித்ததாக சொல்லியுள்ளேன், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் " என்று கூறியுள்ளார். மேலும் அ.சா.3-யை நீதிமன்ற கேள்வி கேட்கபட்டபோது முதல் விசாரணையில் 4 நபர்கள் சண்டை போட்டதை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 4 நபர்களில் நான் அடையாளம் காட்டிய 1வது எதிரியும் ஒருவர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மீதுள்ள 3 நபர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் பெயர் தெரியுமா என்றால்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:15:46 +0530

தெரியாது " என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் எதிரிகளில் அவர்களுக்குள் சண்டை போட்டதாகத்தான் சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் யார், யாரை அடித்தார்கள், யார், யாரை அசிங்கமாக திட்டினார்கள் என்று எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 சாட்சியம் அளிக்காததும் இவ்வழக்கு குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

20. மேலும் 2 வது எதிரியானவர் அ.சா.1-யை வலது மணிக்கட்டில் கல்லால் அடித்ததால் காயம் ஏற்பட்டதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் 2 வது எதிரி அடித்ததாக கூறப்படும் கல்லை கைப்பற்றவில்லை என்று அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் புகார் மற்றும் அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தினை பார்க்கையில் 2 வது எதிரியானவர், அ.சா.1-யை கல்லால் அடித்து காயம் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்டுள்ள ஆவணமான காயச்சான்றிதழான அ.சா.ஆ.7 ல் அ.சா.1-யை நான்கு நபர்கள் கையால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1-யை இவ்வழக்கின் எதிரிகளில் யார் தாக்கினார்கள், எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பதை அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை.

21. மேலும் சம்பவமானது திண்டிவனம் பேருந்து நிலையம் அருகே

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:15:55 +0530

நடைபெற்றதாக அ.சா.ஆ.1 புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 திரு.சாந்தகுமார் என்பவரிடம் சம்பவ இடம் குறித்து வரைபடம் வரைந்து திண்டிவனம் மேம்பாலத்தின் கீழுள்ள ஆட்டோ ஸ்டேண்டில் போலீசார் கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.5 திரு.சிவா அவரது முதல்நிலை சாட்சியத்தில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் ரவுண்டானா அகமது டீ ஸ்டால் எதிரில் நாங்கள் இருந்தபோது டவுன் காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்து 10.09.2025 அன்று கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளார். ஆனால் அ.சா.5 அவரது குறுக்கு விசாரணையில் ஆட்டோ ஸ்டேண்டில் வந்து போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாக முரணாக குறிப்பிட்டுள்ளார். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியம் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்கண்ட பார்வை மகசர் சாட்சிகள் இருவரிடமும் சம்பவ இடத்தில் கையொப்பம் பெறப்பட்டதா என்பது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது.

22. மேலும் விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ல் சம்பவ இடம் மேம்பாலத்திற்கு அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர் சம்பவ இடமானது ஆட்டோ ஸ்டேண்ட் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அ.சா.6 அவரது குறுக்கு விசாரணையில் ஆட்டோ ஸ்டேண்டு என்று வரைபடத்தில் குறிப்பிடவில்லை

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:16:02 +0530

என்றால் சரிதான், அது ஆட்டோ நின்று செல்லும் இடம் என்று கூறியுள்ளார். ஆனால் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தை பார்க்கையில் ஆட்டோ தொழிலாளர்களின் சங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 மற்றும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 சம்பவ இடம் குறித்து முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் சம்பவமானது சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் நடந்ததா என்பதும் அரசு தரப்பில் நிரூபிக்கப்படாததாகவே உள்ளது.

23. மேலும் புகாரில் சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆகியோரின் சாட்சியம் அமையவில்லை. மேலும் சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் பழ வியாபாரம் செய்ததாக கூறப்படும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ன் சாட்சியத்திலும் சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியத்திலும் சம்பவ இடம் குறித்து முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் அ.சா.1 -யை தாக்கியதாக கூறப்படும் கல்லை அரசு தரப்பில் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் 2 வது எதிரியானவர் அ.சா.1-யை கல்லால் தாக்கியதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ள நிலையில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 நாகு என்ற போலீசாரை எதிரிகள் கல்லால் தாக்கியதாக கூறியுள்ள நிலையில், நாகு என்ற போலீசார் யார் என்று அரசு தரப்பில் கூறவில்லை. மேலும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ன் சாட்சியமும் இவ்வழக்கு

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:16:09 +0530

குறித்து தெளிவாக சாட்சியம் அளிக்கவில்லை.

24. எனவே மேற்படி சாட்சிகளிலிருந்து 1வது எதிரியான அப்பு (எ) ஆகாஷ் என்பவர் அ.சா.1 முருகையன் என்பவரின் சீருடையை பிடித்து கீழே தள்ளியதாகவோ, 2 வது எதிரி ராஜேஷ் என்பவர் கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 முருகையன் என்பவரின் வலது கை மணிக்கட்டில் ஓங்கி அடித்ததில் அவருக்கு காயம் ஏற்படுத்தியதாகவோ, 3 வது எதிரி பிரதீப்குமார் மற்றும் 4 வது எதிரி அருண்பிரகாஷ் ஆகியோர் அ.சா.1 -யை சரமாரியாக தாக்கி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை அரசு பணி செய்யவிடாமல் தடுத்து அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள்படியாக எதிரிகள் பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS - ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**26. இறுதியாக, எதிரிகள் பிரிவுகள் 296(b), 126(2), 132, 121(1), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால்**

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:16:16 +0530

**எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1)- BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

27. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 29 -ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:16:23 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்(மு.கூ.பொ)

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.முருகையா தலைமை காவலர் | காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.நாகராஜன் தலைமை காவலர் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.பிரபாகரன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.சாந்தகுமார் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு.சிவா | பார்வை மகசர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.6 | திரு.முருகானந்தம் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**:-

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 10.09.2025 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ----- | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | ----- | பார்வை மகசரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் | அ.சா. 5 |
| அ.சா.ஆ.4 | 10.09.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 10.09.2025 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | 10.09.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | 10.09.2025 | அ.சா.1 -ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.6 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:16:32 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்(மு.கூ.பொ)